4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 569/2019 நாள்: 11.02.2026 வா.சா.1 – அருணகிரி**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 3வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -**

ராமலிங்கம் என்பவர் எழுதிவைத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து தற்போது என்னவாக உள்ளது என்றால் சாட்சி மனையாகவும், விவசாய பூமியாகவும் உள்ளது என்று கூறுகிறார். தாவா சொத்து செல்லப்பம்பாளையம் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை, ஆவணங்களை பார்த்து தான் சொல்லமுடியும். ராமலிங்கம் என்பவர் எழுதிவைத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று தான் பரிகாரம் கோரியுள்ளேன். மேலும் ராமலிங்கம் என்பவர் பிரபுராம் என்பவரை தத்தெடுக்கவில்லை. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்திற்கும் 3வது பிரதிவாதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், எனவே அவருக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. 3வது பிரதிவாதிக்கு சட்டப்படி பத்திரம் பதிவு செய்ய தாக்கல் செய்தார், அதை பதிவு செய்வதற்கு அதிகாரம் உண்டு, எனவே 3வது பிரதிவாதிக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால்

சரியல்ல. 3வது பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.11 17:02:40 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.